TAMIL NADU LEGISLATIVE LIBRARY
22 JAN 1982
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1981 மார்ச் 2.

மாசி 19, ரௌத்திரி— திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வாள்போல் பகைவரை அஞ்சற்க, அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு ''

வாளைப் போன்ற வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை, ஆனால் உறவினரைப்போல் இருந்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்சவேண்டும்.

1. வினாக்கள்— விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

சிவகங்கைப் பகுதியில் கிடைக்கும் பலநிறக் கற்கள்

*வினா எண் 299— திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை பகுதியில் கிடைக்கும் பலநிறக் கற்களை உபயோகப்படுத்தும் வகையில் தொழில்கள் ஆரம்பிக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அரசு இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைப் பகுதியில் கிடைக்கும் கிராபைட்டை தமிழ்நாடு கனிம நிறுவனம் மூலமாக அகழ்ந்து எடுத்து வியாபாரரீதியில் உபயோகப்படுத்த முடிவெடுத்து உள்ளது. இத்திட்டம் முறையே கனிமத்தை வெட்டி எடுத்தல், பிரித்தெடுத்தல், தொழில் முறையில் பயன்படுத்துதல் ஆகிய மூன்று கட்டங்களில் செயலாக்கப்பட இருக்கிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம் வல்லுநர்களை நியமனம் செய்து அவர்கள் மூலம் திட்ட அறிக்கைகளை தயாரிக்கும்பொருட்டு இத்துறையில் தேர்ச்சி பெற்ற வெளிநாடு மற்றும் உள் நாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது.

[1981 மார்ச் 2

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராபைட்டைப் பொறுத்தவரையில் அமைச்சர் சொல்லியது முழுவதும் சரி, ஆனால் அதே நேரத்தில் சிவ கங்கையைச் சுற்றி கிரிஸ்டல் லைம்ஸ்டோன், ரெட் ஆக்கர், மைகா போன்றவைகள் ஏராளமாக இருக்கின்றன. அரசாங் கம் அவைகளை எல்லாம் எடுத்துக் கொள்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 603 ஏக்கர் நிலப்பரப்பில் 2.5 லட்சம் டன் அளவிற்கு அந்தப் பகுதியிலே இருக்கிற கிராபைட்டை மட்டும் முதலிலே தமிழ்நாடு கனிம நிறுவனம் எடுத்துக்கொண்டு, இந்தத் திட்டத்தை செயல்படுத்த விரும்புகிறது. அதற்கான நில ஆர்ஜித வேலை நடைபெற்று வருகிறது. மற்ற கனிமப் பொருள்கள் வியாபார ரீதியில் லாபகரமாக இருக்காது என்று ஆய்வின் அடிப்படையில் தெரிய வந்திருக்கிறது. முதலில் கிராபைட்டும் அதற்குப் பின்னர் மற்ற கனிமப் பொருள்களும் உரிய ஆய்விற்குப் பின்னர் வியாபார ரீதியில் அரசு மேற்கொள்ள முடிவு செய்யும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராபைட்டைப் பொறுத்தவரையில் சிவகங்கைக்கு மேற்கே அமைச்சர் சொல்லியதுபோல் 600 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்க இருப்பது சரி. ஆனால், சிவகங்கைக்கு கிழக்கேயும் வடக்கேயும் பல பகுதிகளில் நான் ஏற்கனவே சொன்னதுபோல் ரெட் ஆக்கர் போன்ற வர்ணத்திற்குத் தேவையான, மிக முக்கியமான பொருள் ஏராளமாகக் கிடைப்பதாக சர்க்கார் அறிக் கையிலிருந்து தெரியவருகிறது. 1880-லே ரூஸ் புரூட் என்ற ஆங்கிலேயர் இதுபற்றி ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பித்திருக் கிறார். ஆகவே, இதைத் தொழில் ரீதியிலே மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே அங்கே கிடைக்கின்ற கற்களை பரிசோதித்து, இதுசம்பந்தமாக தொழிற்சாலையைத் துவங்கு வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப் படையிலேதான் பதில் சொல்லியிருக்கிறேன். இந்தப் பகுதியில் மற்ற கனிமப் பொருள்களை பொறுத்தவரை ஆய்வின் அடிப் படையிலே அவைகள் லாபம் தருவதாக இருக்காது என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதேபோன்ற கனிமப் பொருட்கள் கிடைக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். மீண்டும் தேவையானால் அரசு சார்பில் அந்தப் பகுதியில் ஆய்வை மேற்கொண்டு, வியாபாரரீதியில் லாபம் தருமென்கின்ற அளவில் இருக்குமானால் அரசு உரிய நடவடிக்கை களை மேற்கொள்ளும்.

1981 மார்ச் 2]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, அரசுக்கு மிக நல்ல வருவாய் கிடைக்கக்கூடிய நீலக்கற்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருப்பதாக பத்திரிகைச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வெள்ளியனை, அறவக்குறிச்சி பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் வட்டம் பாளையம் பகுதியிலேயும் சந்தையிலேயே இத்தகைய நீலக்கற்களைக் கொண்டு வந்து இன்றையதினம் வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைகள் இருக்கக்கூடிய பிரதேசங்களைப் பற்றி அரசு ஆய்வு செய்யுமா? நீலக்கற்கள் சம்பந்தமான தொழிற்சாலைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சிவகங்கைப் பகுதியில் கிராபைட் கிடைப்பது பற்றியது. தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளில் இதுபோன்ற கனிமப் பொருள்கள் ஆங்காங்கே கிடைப்பது பற்றி, தமிழ்நாடு மாநில புவியியல் ஆய்வுப்பிரிவு எல்லா மாவட்டங்களிலும் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறது. அந்த ஆய்வின் அடிப்படையிலே, அதற்குப் பின்னர் முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் இராஜபாளையம், திருவில்லிப்புத்தூர் அருகே மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரங்களில் மற்றும் அழகாபுரியிலும் கனிவளங்கள் கோடிக்கணக்கான அளவில் வியாபாரிகள் எடுத்து வியாபாரம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது, ஆய்வு நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூல வினா. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கைப் பகுதியைச் சேர்ந்தது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, சிவப்புக் கற்கள் மட்டுமல்ல, இன்னும் பூமிக்கு அடியிலே பலவிதமான பொருள்கள் கிடைக்கின்றன என்று அரசு குறிப்புகள் கூறுகின்றன. முக்கியமான பொருள்கள் எல்லாவற்றையும் எடுக்கும் நிலைமையிலே அபிவிருத்தி செய்வதற்கு நீண்ட காலமாக கேட்டுக்கொண்டிருந்தும் கூட இன்றைக்கு வரைக்கும் கிராபைட் பொறுத்தவரையில் என்ன நடந்திருக்கிறது என்று தெரியவில்லை ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிராபைட் பற்றி அமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இந்த சிவகெங்கைப் பகுதியிலே தோண்டி எடுக்கக்கூடிய நிலங்களை, ஆர்ஜிதம் செய்யும் வேலைகள் நடந்து வருவதாகச் சொன்னார்கள். அந்த ஆர்ஜித வேலையை முடித்தபின் அங்கு ஒரு தொழிற்சாலையைத் துவங்குவதற்கு குறிப்பாக எவ்வளவு காலமாகும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ? அந்தத் தொழிலை ஆரம்பிப்பதன் காரணமாக எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிப்பார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதற்கான புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இல்லை. முதல் கேள்வி, எப்போது ஆரம்பிக்கப்படும் என்று கேட்டார்கள். அது வெகு விரைவிலே ஆரம்பிக்கப்படும்.

TAMIL NADU CHEMICAL PRODUCTS LIMITED

*Q. No. 300 — THIRU P. NEDUMARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether the eleven cases filed against the former Managing Director of Tamil Nadu Chemical Products Limited for alleged offences under Sections 420, 477A, etc., of C.P C. had been withdrawn by the Government:

(b) if so, the reasons therefor; and

(c) whether the amount involved in the cases which is said to be amounting to Rs. 45 lakhs had been recovered and made good to the Company?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ)—(இ) : தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர் மீது சென்னை தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் குற்றச்சாட்டுகள் வரையப்படவில்லை. மேலும் இந்த வழக்குகளைப் பொறுத்தவரை இருக்கக்கூடிய ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்பொழுது குற்றம் சாட்டப்பட்டவர் மீது வெற்றிகரமாக குற்ற வழக்குத் தொடர முடியாது என்றும், குற்றம் சாட்டப்பட்டவர் மீது வழக்குத் தொடர்வதால் நேரமும், பொதுப்பணமும் வீணாவதுடன் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தொல்லையைத்தான் தரும் என்றும், இந்த வழக்கைத் திரும்பப் பெறலாம் என்றும் அரசு வழக்குரைஞர்